DR. H. V. HANDE : Sir, on a point of order.......

MR. SPEAKER : Let the hon. Member resume his seat.

DR. H. V. HANDE : Sir, I am raising a point of order.

MR. SPEAKER : What is the point of order ?

(7) நடை முறைக் கேள்வி.

ஓர் உறுப்பினருக்கு பேரவைத் தலைவர் எழுதிய கடிதத்தை முதலமைச்சர் பேரவையில் படித்தது குறித்து.

DR. H. V. HANDE : I request the Hon. Speaker to listen to me. My point of order is that any communication between the Hon. Speaker and an hon. Member is not to be read in the House and that is the procedure we have been following so far. Now, I want to know whether it is in order for the Hon. Chief Minister to read the contents of the letter sent by the Hon. Speaker to the hon. Member. That is the document in the hands of the hon. Member and its contents have been exposed. Is it proper to do so ? Also, we have given notice of call attention motions and we do not know when they are likely to be taken up. I have also given notice of a call attention motion and the Hon. Minister for Transport has also referred to it this morning. But as the Assembly is sitting for a day or two only, I do not know whether it will be taken up during this sitting or not.

It is difficult for us to know when we are going to get it. What guarantee is there that it will come day after tomorrow ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய குற்றச்சாட்டு எல்லாம் ரூல் 41 ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுதான். அதை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொல்வது தவறு, ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, அது என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, மற்றவைகள் என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதில் எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி அந்தக் கடிதங்களைப் படிக்கலாம், விவரம் எப்படிக் கொடுக்கலாம் என்று கேட்டார்கள். நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டும் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். சபாநாயகர் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் இடையே இருக்கும் விவரங்களை அவையிலே குறுக்கே கொண்டுவரும் முறை தவிர்க்கப்படவேண்டும். எல்லோரும் அவரவர்கள் விதிமுறைப்படி நடந்தால்தான், மரபுகள் காப்பாற்றப்படுவதற்கும், ஜனநாயகம் வளர்வதற்கும் அமைப்பாக இருக்கும். இங்கே கனம் உறுப்பினர் அவர்கள் அதற்கான விளக்கம் கேட்டதை விட, பேரவைத் தலைவரிடத்திலே தனியாகக் கேட்டு இருக்கலாம். சபையின் நடவடிக்கைகளில் குறுக்கே நுழைந்து அதை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கி விட்டால்,

அதற்காக சமாதானம் கூற பேரவைத் தலைவர் கீழே இறங்கி வர முடியாது. ஆகவே, பேரவைத் தலைவர் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். ஏனென்றால், ஏதோ பெரிய விஷயம் என்று மற்றவர்கள் நினைத்து இருப்பார்கள். மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றி கவன ஈர்ப்பு கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்த மது விலக்குச் சட்டத்தைப் பற்றிய விவாதம் இன்று நடக்க இருக்கிறது. அந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல், நான் ஏதோ அவர்கள் மீது 'ரிஃபலக்ஷன்' செய்வதாகக் கருதக் கூடாது, வாக்-அவுட் செய்ய வேண்டுமென்று முன்பே முடிவு செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தீர்மானத்தின் மீது அக்கறையில்லை. அடுத்த நிகழ்ச்சியைப் பற்றி அக்கறை இல்லை. இரண்டு நாட்கள் மது விலக்கைப்பற்றி விவாதம் இருப்பதால், அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லை.

இன்னொன்று, விலைவாசி பற்றியது. விலைவாசி என்பது நிரந்தரமான ஒன்று. நான் அதிலே தெளிவாக எழுதியிருக்கிறேன். It is a continuing problem. விலைவாசி என்பது ஏறுவதும், இறங்குவதும் என்பது தொடர்ச்சியான ஒன்று. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இது வராது என்று நிராகரித்து இருக்கிறேன்.

பேரவைத் தலைவர் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நிராகரித்துத்தான் இந்த அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற தேவையில்லை. அரசாங்கமும் விதி முறையிலிருந்து தப்பவேண்டுமென்ற நிலைமையில் இல்லை. ஒவ்வொரு கட்சிக்கும் உரிமை இருக்கிறது. ஆளும் கட்சிக்கும் உரிமை இருக்கிறது. எதிர்க்கட்சிக்கும் உரிமை இருக்கிறது. அந்த விதிகளைப் பின்பற்றினால்தான் நாம் எல்லாம் திறமையாகப் போராடவும், ஜனநாயகத்தில் நம்முடைய கடமையைக் கட்டிக்காக்கவும் முடியும் என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சியோடு சொன்னதைப்போல், இந்த மாதிரியான வெளிநடப்புகள் தேவையில்லை. வெளிநடப்புகளை வாடிக்கையாகக் கொள்ளக்கூடாது. அதனால் எதுவும் நடந்து விடாது. உண்மையிலேயே அக்கறை இருக்கிறது என்று சொன்னால், மது விலக்கு பற்றிய மசோதாவின் மீது பேச வேண்டும். என்ன வருகிறது என்று தெரியாமல் பொதுவாக வெளிநடப்பு என்று சொன்னால், அது சட்ட மன்ற மரபுகளுக்கு உகந்தது அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Walk-out is the right of Members. D.M.K. members have staged walk-outs so many times before.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மரபைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுவதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அவர்கள் எதை எதிர்த்து வாக்-அவுட் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் வாக்-அவுட் செய்தது முதலமைச்சர் பேசிய பேச்சின் மீதோ, அல்லது மற்ற அமைச்சர்கள் பேசிய பேச்சின்மீதோ அல்ல. சபாநாயகர் தீர்ப்பை எதிர்த்து வாக்-அவுட் செய்து இருக்கிறார்கள். வாக்-அவுட் செய்தது தவறு என்று சொல்லிக்கூட உரிமை பிரச்சனை எழுப்பலாம். பெருந்தன்மை காரணமாக அதைச் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை வாய்ப்பாகக் கருதி செய்கிருர்கள். இந்த மன்றத்தின் பேரவைத் தலைவர் உரிமை, திரு. மதியழகன் உரிமை அல்ல, திராவிட முன்னேற்றக்கழகத்தின் உரிமை அல்ல—சட்டமன்றத்தின் உரிமைகளைப் பற்றிய கவலை எனக்கு இருக்கிறது. நெடுநாட்களாக ஆட்சியில் இருந்தவர்களே இதைப்போல் செய்யலாமா? வாக்-அவுட் செய்வது உரிமை என்று தெரியும். இருந்தாலும் அவர்கள் கொண்டுவந்திருக்கும் குற்றச்சாட்டு, பேரவைத் தலைவர் ஏதோ தன்னுடைய கடமையிலிருந்து தவறி விட்டார், பேரவைத் தலைவர் இதை நிராகரிப்பதன் மூலம் அரசாங்கத்தைக் காப்பாற்ற விரும்புகிருர், என்கிற தவருன எண்ணத்தில் மன்றத்தின் வெளியே இருப்பவர்கள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இத்தனையும் சொல்கிறேன். மீண்டும் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடுகிற நேரத்தில் இப்படிப்பட்ட வாக்-அவுட் செய்வது நியாயம் தானு என்பதைப் பற்றி நீங்கள் முடிவு செய்து இந்த மன்றத்திற்குத் தெரிவியுங்கள். அது பேரவைத் தலைவருக்கு அதிக வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, அடுத்த நிகழ்ச்சிக்கு நான் செல்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு மதுவிலக்குச் (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு. (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1971).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு மதுவிலக்குச் (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1971), ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என நேற்றே முன்மொழிந்துள்ளேன். இச்சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டம், 1937-ம் ஆண்டுச் சட்டம், இப்போது தமிழ்நாட்டிலே நிறுத்தி வைக்கப்படவேண்டும், கொள்கையளவில் மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தை அகில இந்திய ரீதியிலே எல்லா மாநிலங்களுக்கும் பொருந்துகிற வகையில் கொண்டு வருகிற வரையில், என்ற முடிவை எடுத்ததால் இந்த மசோதா இப்போது வருகிறது. எந்த மாநிலத்திலும் இந்தச் சட்டம் அமுலில் இல்லை, இந்த மாநிலத்தில் மட்டும் இந்தச் சட்டத்தை வைத்து இருப்பது நியாயம் அல்ல, அது இந்த மாநிலத்திற்குப் பெரிதும் பாதகம் விளைவிக்கிறது என்பதை அறிவித்து இந்த முடிவை எடுத்து, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிருேம்.

அந்த முடிவை எப்படி நிறைவேற்றுவது என்ற பிரச்சினை வந்தபோது, நம்முடைய மாநில அரசின் முடிவு நிரந்தரமாக மதுவிலக்குச் சட்டம் கூடாது என்பது அல்ல. இடைக்காலமாக, மத்திய அரசாங்கம் முடிவு எடுக்கும் வரையில் இந்தச் சட்டத்தை நிறுத்தி வைக்கலாம் என்ற அடிப்படையிலே தான் இதை நிறைவேற்ற இருக்கிருேம். 1937-ம் ஆண்டு சட்டத்திலே அதற்கான உரிமை இருக்கிறது. அந்தப் பிரிவைப் பயன்படுத்திக்கொண்டு இடைக்காலமாக இதை நிறுத்தி வைக்கலாம் என்று முடிவு செய்து இருக்கிருேம். அதை இந்த அவையிலே அறிவித்து இருக்கிருேம்.

---

* 1971 அக்டோபர் 21-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.